# செம்பதாகை

மலர்: 3
இதழ்: 11
1981 கார்த்திகை
விலை சதம்: 75
புரட்சிகர வெகுஜனஏடு

## ★ அரசு பெருமினவாதத்தை நிறுத்தவேண்டும்!

## ★ கூட்டணி பிரிவினையைக் கைவிடவேண்டும்!

அரசாங்கம் கடைப்பிடித்து வரும் பெருமின வாதப் போக்கை எதிர்த்தும், தமிழர் கூட்டணி பிரசாரப் படுத்தி வரும் பிரிவினைக் கோரிக்கையை கைவிடக் கோரியும் நாட்டின் தேசபக்த, ஜனநாயக, முற்போக்கு சக்திகள் தேசவிடுதலையை முதன்மைப்படுத்தி இன ஐக்கியத்தை வற்புறுத்தல் வேண்டும். நாட்டின் இன்றைய சூழலில் இனங்கள் மத்தியில் உள்ள கசப்புணர்வுகளையும், சந்தேகங்களையும், பரஸ்பரம் பயப்பீதியையும் ஓரளவிளவுதானும் குறைப்பதற்கு இதுவே வழியாகும்.

தொடர்ந்து வந்த அரசாங்கங்கள் கடைப்பிடித்து வந்த பெருமினவாதத் தன்மை கொண்ட நடவடிக்கைகள் தமிழ்பேசும் மக்களை விரக்திக்கும் வெறுப்பு நிலைக்கும் தள்ளிவிட்டுள்ளது என்பது உண்மையே. வடக்கு கிழக்கு மாகாணங்களில் அரசின் திட்டமிட்ட குடியேற்றம், வேலைவாய்ப்பு, கல்வி, மொழிப்பிரயோகம், மலையகத் தமிழ் மக்களின் ஜீவாதார உரிமைகள் இன்னும் பல அரச நடவடிக்கைகளில் தமிழ் மக்களுக்கு எதிரான பாகுபாடு புறக்கணிப்பு என்பன கடைப்பிடிக்கப்பட்டே வந்துள்ளன. இவற்றுக்கு எதிராக சிங்கள மக்கள் மத்தியிலுள்ள முற்போக்கு புரட்சிகர சக்திகளோடு ஐக்கியப்பட்டு தேசியரீதியில் போராட்டங்களை முன்னெடுப்பதற்குப் பதிலாக தமிழ்த்தலைவர்களும் அவர்களது கட்சிகளும் குறுகிய இனவாதத்தை முன் வைத்தனர். அது அவர்களது பாராளுமன்ற அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்கு பேருதவியாக அமைந்தது. அதே வேளை இவர்களது முன்பின் யோசனையற்ற கொள்கைகள் நடவடிக்கைகள் பெரும்பான்மையான சிங்களமக்கள் மத்தியில் சந்தேகங்களையும் பய உணர்வுகளையும் தூண்டிவிட்டன என்பதும் உண்மையே.

முதலாளித்துவ பாராளுமன்ற அமைப்பு முறை என்ற சகதிக்குள் இந்த நாட்டு மக்கள் அனைவரையும் இழுத்துச்சென்ற சிங்கள தமிழ் தலைவர்கள், தங்களால் வாக்குறுதி அளிக்கப்பட்ட பிரச்சினைகளைத் தீர்க்க முடியாத நிலையில் மக்களின் கவனத்தை இனவாத வழிகளில் திசைதிருப்பிவிட்டனர். முதலாளித்துவ யதிநுட்பம் கொண்ட டி. எஸ். சேனநாயக்கா போன்ற யூ.என்.பி. தலைவர்கள் திட்டமிட்ட குடியேற்றங்களை ஆரம்பித்தும், மலையகத் தமிழ்மக்களின் பிரஜாவுரிமையைப் பறித்தும் ஒரே கல்லில் பல பறவைகளை வீழ்த்தும் வேலையைச் செய்து முடித்தனர். இவற்றின் மொத்த விளைவுகள் மோசமானதும் கீழ்த்தரமானதுமான இனக்கலவரங்களை பல தடவைகள் நாடு சந்திக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது.

இன்றைய பெரு முதலாளித்துவ கட்சியான யூ. என்.பி.யின்கீழ் 77 லும் 81 லும் மோசமான இனக்கலவரங்கள் கட்டவிழ்த்து விடப்பட்டன. இந்த இனக் கலவரங்களில் தமிழ்மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். என்றுமில்லாதவாறு தோட்டத் தொழிலாளர்கள் கொடுமைப்படுத்தப் பட்டுள்ளனர். சிங்கள—தமிழ் மக்களின் பொது எதிரியாகிய தன்னை, எதிர்த்துப் போராடவேண்டிய உழைக்கும் மக்களை இனக்கலவரங்கள் மூலம் பிளவுபடுத்தி வைத்ததில் ஆளும் வர்க்கம் தற்காலிக சந்தோஷத்தை மட்டுமே அடைந்துளது.

### ★ தேசவிடுதலைக்கு இனஐக்கியம் அவசியம்!

### ★ பயங்கரவாதத்தால் பயன் ஏதும் இல்லை!!

இனங்கள் மத்தியிலுள்ள நல்லுறவை கெடுத்து உழைக்கும் வர்க்க சக்திகளின் ஐக்கியத்தை சிதறடிக்கும் இனக்கலவரங்களை - அவற்றைத் தூண்டும் ஆளும்வர்க்க இனவாத சக்திகளை இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி (இடது) மிக வன்மையாகக் கண்டிக்கிறது. அதேவேளை நாட்டிலுள்ள சகல தேசபக்த ஜனநாயக — முற்போக்கு சக்திகளும், தேச விடுதலையை

(6-ம் பக்கம் பார்க்க)

## உபாலி விவகாரம்

## யூ. என். பி.யை பிளக்குமா?

வரவு செலவுத் திட்ட விவாதத்தின் ஒருகட்டத்தில் உபாலியின் விவகாரம்பெரும் சர்ச்சையைக் கிளப்பிவிட்டுள்ளது. இச்சர்ச்சையானது ஆளும் கட்சியான யூ.என்.பி கட்சியை உடைத்தெறியுமா? என்பதே இன்று அரசியல் வட்டாரங்களில் கிளப்பப்பட்டுள்ள கேள்வியாகும்.

யூ. என். பி. பதவிக்கு வந்து அரசியல் சாசனத்தில் மாற்றத்தை ஏற்படுத்தி, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக ஜே. ஆர். தன்னைத்தானே நியமித்த காலமுதல் யூ. என். பி. க்குள் அதிகாரப் போட்டியும், கோஷ்டி சேரலும் ஆரம்பித்தது. கடந்த நான்கு வருடங்களாக இக் கோஷ்டிகளிடையே பல விவகாரங்கள் நடைபெற்று உள்ளன. அவை யாவும் வெளியில் வரவில்லை. இதில் முக்கியமான அம்சம் என்னவெனில் தற்போதைய ஜனாதிபதியின் வாரிசாக இருக்கப்போவது யார் என்பதேயாகும். ஜனாதிபதி உட்பட யூ. என். பி.க்குள் ஒரு பகுதியினர் பெரும் கோடீஸ்வரரான தற்போதைய கதாநாயகன் உபாலி விஜயவர்த்தனவை 'வாரிசு' ஆக்க முயன்று வருகின்றனர். இதை பிரதமர் உட்பட யூ.என்.பி.க்குள் உள்ள எதிர்க்கோஷ்டியினர் வன்மையாக எதிர்த்து வருகின்றனர். இதன் வெளிப்பாடே உபாலி விவகாரமாக வரவு செலவுத் திட்ட விவாதத்தில் வெளி வந்துள்ளது.

பிரதமரின் பக்கத்தில் உள்ள நிதியமைச்சர் ரொனி டீ. மெல் பாராளுமன்றத்தில் உபாலி விஜயவர்த்தனவை பிய்த்தெறிந்தார். அதே தினத்தன்று உபாலி விஜயவர்த்தன சுதந்திர வர்த்தக வலயத்தில் தென்கொரிய நிறுவனம் ஒன்றை திறந்து வைக்கும் நிகழ்ச்சியில் ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனவுடன் கலந்துகொண்டு தனக்கு இருக்கும் செல்வாக்கை உலகுக்கு உணர்த்தினார். இதிலிருந்து யூ. என். பி.க்குள் ஏற்பட்டிருக்கும் விரிசலும், இதில் யார் யார் எந்தக் கோஷ்டியில் உள்ளனர் என்பதையும் அரசியல் அவதானிகள் அவதானிக்கக்கூடியதாக உள்ளது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள்ளும் ஏனைய கட்சிகளுக்குள்ளும் உடைவுகளை விரும்பிய யூ. என்.பி. கட்சியானது தற்போது பெரும் உடைவை நோக்கிச் செல்லும் நிலையிலிருந்து தன்னைக் காப்பாற்றிக்கொள்வது முடியாத காரியமாகவே உள்ளது.

'ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்கு இலாபம்' என்பதுபோல் யூ. என. பி. க்குள் ஏற்பட்ட கோஷ்டிப் பூசல் மறைந்திருந்த சில உண்மைகளை வெளிக்கொணர்ந்திருக்கின்றது. உபாலியின் சாம்ராஜ்யத்தையும் அதன் உள் மறைந்திருக்கும் 'முதலாளித்துவக் கேவலங்களையும்' மக்கள் அறிவதற்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்துளது. எந்த நோக்கத்திற்காக நிதியமைச்சர் உபாலியின் விவகாரத்தைக் கிளப்பியிருந்தாலும், அதிகாரத்திலுள்ள உயர் மட்டப் புள்ளிகளின் செயலப்பின்னையான ஒரு பெரும் கோடீஸ்வரரின் சுவரூபத்தை அம்பலப்படுத்திய துணிவிற்காக நிதி அமைச்சரைப் பாராட்ட வேண்டும். இதிலிருந்துநாட்டு மக்கள் ஒரு விடயத்தைத் தெரிந்துகொள்ள முடியும். அதாவது நிதியமைச்சர் அம்பலப்படுத்தியது ஒரு உபாலியையும் அவரது சாம்ராஜ்யத்தையும் மட்டுமேயாகும். ஆனல் இன்னும் பல உபாலிகள் பற்பல சாம்ராஜ்யங்களை நடாத்தி தேசிய செல்வத்தையும் மக்களின் உழைப்பையும் சூறையாடி சொர்க்கபுரி வாழ்க்கை நடாத்துகிறார்கள். இவர்கள் ஒரு இனத்தையோ அன்றி ஒரு மதத்தையோ சேர்ந்தவர்களல்லர், இந்த நாட்டு மக்கள் அனைவரையும் சூறையாடும் பெரு முதலாளிகளாவர். இவர்களும் இவர்களுடைய அரசியல் பிரதிநிதிகளும்தான் இன்று நமது நாட்டையும் மக்களையும் அமுக்கி வைத்திருக்கிறார்கள். எதிர்காலத்திலும் இவ்வாறே அமுக்கி வைத்திருப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்பவர்களும் [illegible] புள்ளிகளே என்[illegible] மக்கள் புரிந்து [illegible] அவசியம்.

## வரவுசெலவுத் திட்டத்தால் வாழ்க்கைச் செலவு உயரும்!

யூ. என். பி.யின் ஐந்தாவது வரவு செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்பட்டு அதை விவாதிக்க கூடுதலான நாட்களும் ஒதுக்கப்பட்டு, விவாதங்கள் நடைபெற்று கொண்டிருக்கின்றன. இதுவரை சமர்ப்பிக்கப்பட்ட வரவு—செலவுத்திட்டங்களில் மிகப் பெரிய வரவுசெலவுத்திட்டம் இதுவே என்று நிதியமைச்சர் பெருமைகொள்ளும் அதேவேளை மிகப்பெரிய பற்றுக்குறை வரவுசெலவுத் திட்டமும் இதுவேயாகும். இவ்வளவு பாரியபற்றுக்குறை வரவு செலவுத் திட்டத்திற்கு காரணம் தாங்கள் மேற்கொண்டிருக்கும் மிகப்பெரிய அபிவிருத்தித் திட்டங்கள் தான் காரணம் என்று அரசு பக்கத்தில் கூறப்படுகிறது.

ஆனல் எந்த அபிவிருத்தித் திட்டம் இதுவரை முழுமையாக நிறைவேறி அபிவிருத்தியைக் கொடுத்துளது என்பது ஆட்சியில் உள்ளோருக்கு மட்டுமே வெளிச்சம். வெளிநாடுகளில் குறிப்பாக மேற்கத்தைய நாடுகளில் கடன் பெற்ற பணம் அபிவிருத்தித் திட்டங்கட்கு ஒதுக்கியது உண்மைதான். ஆனல்அவை உரிய திட்டங்களுக்கு உரிய முறையில் செலவு செய்யப்படுவதற்கு பதிலாக கொந்தராத்துக்காரர்கள், பெரும் அதிகாரிகள், பெரும் தரகர்கள் போன்றோரின் பெட்டிகளுக்கு மிகச் சுலபமாக சென்றடைந்துவிட்டது. எஞ்சியவையும் லஞ்சம், ஊழல், களவு, வீண்விரயம் போன்ற வழிகளால் அபிவிருத்தித்திட்டப்பகுதிகளிலிருந்து வெளியேறிக் கொண்டுளது. அதே

(6-ம் பக்கம் பார்க்க)

# பிச்சைப் பணம் முடிந்து விட்டது!

சில காலமாக சிலருக்கு மட்டும் தென்பட்டு வந்த முரண்பாடுகள் இப்பொழுது யூ. என். பி.க்குள் வெடித்து வெளியே தெரிய ஆரம்பித்துள்ளன. வர்க்க அடிப்படையில் ஆளும்கட்சி ஒருமைப்பாடுடையதாய்த் தோற்றமளிப்பினும் குழு வேறுபாடுகளும் தனிமனித போட்டா போட்டிகளும் பொருளாதாரப் பிரச்சினைகளினடியாக எழத்தான் செய்கின்றன. அதாவது அடிப்படையில் உள்ள பொருளாதாரப் பிரச்சினைகள் தனிமனித சமூகக் கண்ணோட்ட வேறுபாடுகளின் அடிப்படையில் வேகம் பெறுகின்றன. முதலாளித்துவ பொருளாதாரத்தை எப்படிக் கட்டிக் காப்பது எவ்வாறு மேல் எடுத்துச் செல்வது என்பது பற்றிய அபிப்பிராய பேதங்கள், முரண்பாடுகளுக்கும் மோதல்களுக்கும் காரணங்களாய் அமைகின்றன. இலஞ்ச அதிகாரவேட்கையும் அதற்கான சூழ்ச்சிகளும் திட்டங்களும் சூழலைச் சூடாக்குகின்றன எனலாம்.

யூ.என்.பி. பதவிக்கு வந்த ஆரம்ப சூரத்தனத்தில், முன்னர் ஒருபோதும் இந்நாடு கண்டிராத வெளிநாட்டு நிதி உதவியின் பெருக்கத்தில், ஆளும் கட்சியினர் தன்னம்பிக்கையுடன் செயலாற்றி வந்தனர். உயர்மட்டத்தில் பதவிக்கான போட்டாபோட்டிகள் இருந்த பொழுதிலும் முரண்பாடுகள் கூர்மையடையவில்லை. ஜனாதிபதி - பிரதமர் போட்டி என்ற வடிவத்திலேயே அது பலராலும் கண்களுக்கு தெரியாமல் இருந்து வந்தது.

ஆனல் கோடிக்கணக்கில் கிடைத்த கடனுதவிகள் லஞ்சம் ஊழல், அசிரத்தை, வீண்விரயம் முதலியவற்றுள் கரைந்துபோன இன்றைய சூழ்நிலையில் பற்றுக்குறை வரவு– செலவு திட்டத்தை நிதியமைச்சர் சமர்ப்பிக்கும் இக்கட்டான சூழ்நிலையில் நெருக்கடியிலிருந்து தப்புவதற்காக மாறுபட்ட மார்க்கங்கள் தேடப்படுகையில் முரண்பாடுகளும் அதிகரித்து வருகின்றன. முரண்படும் சக்திகளை மோதவிட்டு தனது உயர்நிலையையும் இன்றியமையாமையையும் பாதுகாத்துக் கொள்ள முயன்று வருகின்றார் ஜனாதிபதி. இத்தகைய சூழ்நிலையிலேதான் இலங்கையின் முதலாம் நம்பர் கோடீஸ்வரனான உபாலி விஜயவர்த்தனவையும் தாக்குதலுக்கு திருப்பியிருக்கின்றனர் பிரதமரும் நிதியமைச்சரும். தனியார்துறை வளர்ச்சி என்பதனை தாரக மந்திரமாகக் கொண்டுள்ள இந்த அரசாங்கம் தனியார் துறை வளர்ச்சியின் தனிப்பெரும் சின்னமாக விளங்கும் உபாலி நிறுவனத்தைத் தாக்குவது விசித்திரமாக தோன்றக் கூடும். ஆனல், பொதுமக்கள் கண்ணில் மண்ணைத் தூவும் முயற்சியாகவும் பிரேமதாசாவின் பிரதான போட்டியாளர் ஒருவரை இழுத்து வீழ்த்தும் முயற்சியாகவும் இது இருக்கிறது. பெரும் முதலாளிகளை இந்த அரசு கண்டிக்கிறது என்னும் பிரமையை சாதாரண மக்கள் மத்தியில் எழுப்புவதற்காக "இந்த நாடகம்" நடிக்கப்படுகிறது என்பதில் ஐயமில்லை.

பற்றுக்குறை வரவு — செலவுத் திட்டத்தை முன்வைக்கும் நிதியமைச்சர் கொஞ்சம் பணக்காரர்மீது கைவைக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டு உள்ளார். வரிச்சலுகைகள் என்ற பெயரில் உள்நாட்டு, அந்நிய கம்பெனிகள் கடந்த மூன்று நான்கு வருடங்களாக ஏறத்தாழ வரிகள் செலுத்தாமலே கொள்ளை இலாபம் சம்பாதித்து வந்தன. அதனை ஒரு சிறிது நிவிர்த்திசெய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ரொனி டீ மெல்லுக்கு ஏற்பட்டுள்ளது. அதற்கு முதற்படியாகவே இந்த வரவு—செலவுத் திட்டத்தில் சில வரிகள் புகுத்தப்பட்டிருக்கின்றன. மலைபோல் வளர்ந்துவரும் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பை இது குறைக்கப் போவதில்லை. ஆனல் மக்களை ஏமாற்ற முயலும் நடவடிக்கையாகவே இத்தகைய கண்டனங்கள் அமையும்.

★

## வாசகர் கடிதங்கள்

புரட்டாதி - ஐப்பசி மாதத்திற்கான வெளியீட்டில் தோழர் கரவிட்ட அவர்களின் பேட்டி மிக சிறப்பாக அமைந்திருந்தது. முதலாளித்துவ அரசியல் வாதிகள் இனவாதத்தை தமக்கு சாதகமாக பாவித்துவரும் இவ்வேளையில் உண்மையான அரசியல் கண்ணோட்டத்தில் அதுவும் சரியான நேரத்தில் இவ்வாறான பேட்டியை வெளியிட்டு மலையக மக்கள் மத்தியில் ஓரளவாவது தங்கள் பத்திரிகை விளக்கமளித்துள்ளதைப்பற்றி பாராட்ட வேண்டும். தொடர்ந்தும் இவ்வாறான அரசியல் கண்ணோட்டத்தில் அமைந்தபேட்டிகளை வெளியிட்டால் மலையக மக்கள்மத்தியில் ஓரளவாவது அரசியல்விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தலாம்.

ஆகையால் இதுபோன்ற பேட்டிகளை தொடர்ந்தும் வெளியிடும்படி தோழமையோடு கேட்டுக் கொள்கின்றேன்.

டீ. கே. ஆனந்தன்
அட்டன்

★

இலங்கையில் பல வெளிநாட்டு நிறுவனங்கள் உள்ளூர் பெயர்களில் தமது பல்வகை நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன. இவ்வெளி சக்திகளின் நடவடிக்கைகள் உள்நோக்கம் கொண்டவை என்ற செம்பதாகையின் கருத்துகள் நியாயமானதே. கிராமமக்களுக்கு உதவி, தோட்டத் தொழிலாளர்களுக்கு வழிகாட்டுதல், சாதி தீண்டாமை, - சீதன ஒழிப்பு என்ற பெயர்களில்இயங்கும் அமைப்புக்களைப்பற்றிய விரிவான விளக்கங்களை பொது மக்களுக்கு செம்பதாகை எடுத்து கூறவேண்டும்.

சி. க. தர்மகுலநாதன்
காரைநகர்

# தள(ர்)பதியாருக்கு படை தேவையாம்!

பல தடவைகள் நாம் இப்பகுதியில் சுட்டிக் காட்டியிருப்பதுபோல கூட்டணி அரசின் சகாவாக மாறிக் கொண்டுவருகிறது. சேற்றுக்குள் மேலும் மேலும் காலை விடுவதுபோல எப்படியும் யூ. என். பி. யுடன் சங்கமமாகியே திருவோம் என்ற தோரணையில் கூட்டணியினர் இயங்கிக் கொண்டிருக்கின்றனர்.

கொழும்பிலுள்ள தமிழ் முதலாளித்துவ சக்திகள் இட்ட கட்டளைகளை அமிர் கும்பல் பயபக்தியுடன் நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றன என்பதும் உண்மையே. மாவட்ட அபிவிருத்தி சபைகளைவெற்றிகரமாக நடாத்தியே தீருவோம் என்று அமிர்தலிங்கம் சபதம் செய்திருக்கிறார். தங்குமிடம் நிரந்தர (ஆண்டிகள்) மடமாகினாலும் பரவாயில்லை என்பது அவரின் வாதம். பதவி இருந்தால் போதும் என்ற மனப்பான்மை!

ஜே. ஆர். — அமிர் சந்திப்புகளின்போது கூட்டணித் தலைவர் அடிக்கடி கேட்கும் அதி முக்கியமான கோரிக்கை ஊர்காவல் படை திரட்டும் உரிமையாகும். இதுபற்றி அண்மையில் மாவட்ட சபை பிரமுகர் தனது உற்ற நண்பருக்கு பின்வருமாறு விளக்கம் கூறினாராம். இளைஞர் சக்திகள் தம்மை விட்டுப் பிரிந்துசென்ற நாட்கள் முதல் அமிருக்கு ஒரே ஒரு கவலை! படைகள் இல்லாத் தள(ர்) பதியாகத்தான் இருக்கிறேனே என்று. எனவே ஊர்காவற் படைக்கு ஜே.ஆர். அனுமதி வழங்கினல் சம்பளம்கொடுத்தாவது தனக்கென ஒரு படை நடாத்தலாமே என்பது அவரின் ஆசை. அது கட்சிப்படையாகவும், கட்டுப்பாட்டை மக்கள்மீதுசெலுத்தும் படையாகவும் யாவற்றுக்கும் மேலாக எதிர்ச்சக்திகளை மோப்பம்பிடித்து மடக்கும் படையாகவும் அது விளங்கும் என்பது அமிரின் எண்ணமாம். குறிப்பாக இளைஞர் சக்திக்கு மாற்றுசக்தியாகவும், "வேலைக்கார" படையாகவும் அது இருக்கும் என எண்ணுகின்றனர்போல தெரிகிறது.

ஆனல் அரசியல்வாதிகள் மசிந்தாலும் ஆயுதப் படைகள் மசியவில்லையாம். உத்தேச ஊர்காவல் படை தமிழர் படையாக இருக்க மாட்டாது என்றும், தமிழ் தெரிந்தவர்களைக் கொண்ட படையாகவே இருக்க முடியும் என்றும் பாதுகாப்புப் படையினர் அபிப்பிராயம் தெரிவித்துள்ளனராம். அப்படியாயின் தமிழரல்லாதாரும் உத்தேச ஊர்காவற் படைகளில் கணிசமாக இருப்பார்கள். இது கூட்டணித் தலைமைக்கு தலையிடியைக் கொடுத்திருக்கிறதாம். கருணாநிதி, நெடுஞ்செழியன் பாணியில் தமிழ்ப்படை நடாத்தி, வீரவாள் ஏந்தி ஊர்வலம் வர எண்ணிய கனவுகள் பகற்கனவுகளாய் மாறிவிடுமோ என்ற ஐயமும் அவர்களை வாட்டுகிறதாம். சரண் அடைந்தபின் தனித்துவம் பற்றி எப்படிக் கனவுகாண முடியும்? ★

## கருத்தும் கண்ணோட்டமும்

ஜனமகன்

# அமெரிக்க தூதுவர் மாற்றப்பட்டேன்

திடீரென இலங்கையில் உள்ள அமெரிக்க தூதுவர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ள செய்தி வெளிவந்துளது. முன்னர் போர்ட் அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த காலத்தில் இங்கு தூதுவராக இருந்தவர் மீண்டும் வரவிருப்பதாக செய்திகள் கூறுகின்றன. அதிகாரிகள் இடமாற்றலாகிச் செல்வது சர்வசாதாரணமான சம்பவமே. ஆயினும் திரு. ரூசெயின்ற் திடீரென மாற்றப்படுவதற்கு சில காரணங்கள் இருக்கக்கூடும் என்றே இங்கு கொழும்பில் விஷயமறிந்த வட்டாரங்களில் பேசிக்கொள்ளப் படுகிறது.

தற்சமயம் உள்ள நிதி நெருக்கடிபற்றி அவர் சற்று கடுமையான அபிப்பிராயங்களை அரசாங்கத்துக்கு அடிக்கடி கூறியதன் காரணமாக இந்நாட்டு அரசு அதிருப்தி தெரிவித்தமையாலே அவர் விரைவில் மாற்றப்பட்டிருக்கலாம் என்பதே இராஜதந்திர வட்டாரங்களில் காதோடு காதாய் பேசிக் கொள்ளப்படுகிறது. கோடிக்கணக்கில் அமெரிக்காவும், உலக வங்கியும் ஏனைய மேற்குலக நாடுகளும் இங்கு கொட்டும் கடனுதவி விரயமாக்கப்படுவதை அமெரிக்க தூதுவர் சற்று காரசாரமாகவே குறிப்பிட்டிருப்பதாய் கூறப்படுகிறது. இது யூ.என். பி. உயர் தலைமைக்கு உவந்ததாக இருக்கவில்லையாம்

இன்று இந்துசமுத்திரத்தில் குறிப்பாக தென் ஆசியாவில் இலங்கை முக்கியமான பகடைக்காயாக அமெரிக்காவால் உருட்டப்படுகிறது. சோஷலிச வாடையே இல்லாமல் இந்நாட்டை உருமாற்றி அமைக்கும் பரிசோதனையை உலக வங்கியின் பொருளாதார நிபுணர்கள் இலங்கையில் இப்பொழுது மேற்கொண்டு வருகிறார்களாம். பாராளுமன்ற சனநாயக தோற்றத்தைமுற்றாக மாற்றாமலும், தென்கொரியா தாய்லாந்துபோல இராணுவ சர்வாதிகார ஆட்சிமுறைகளைப் புகுத்தாமலும் நாசூக்காக தனியார்துறை மேலாதிக்கம் செய்யும் பொருளாதார அமைப்பையும் ஜனாதிபதி தனிச் செல்வாக்கு வகிக்கும் பாராளுமன்ற முறையையும் வைத்துக்கொண்டு இலங்கையை அமெரிக்க ஏகாதிபத்திய வட்டத்துக்குள் இறுக்கமாய்ப் பிடித்துக் கொள்வதே மேற்கூறிய பரிசோதனையின் குறிக்கோளாகும். இந்நிலைக்கு ஆளும் தலைவர்களின் அநுசரணையும், ஆதரவும் வேண்டுமாகையால் அவர்களுக்கு அத்தனை விருப்பம் இல்லாத தூதுவரை மாற்றுவது அமெரிக்க வெளிவிவகார அமைச்சிற்குப்பெரும் காரியமல்ல என்று கூறப்படுகிறது.

சீனாவிலே புரட்சிக்கு முன்னர் சியாங்கை - ஷேக் பதவியிலிருந்த காலத்தில் அமெரிக்க தூதுவர்கள் அடிக்கடி மாற்றப்படுவது வழக்கமாம். சியாங்கை-ஷேக் அமெரிக்க ஆதரவிலும் நிதியுதவியிலும் இருந்தவன். ஆயினும் கைப்பொம்மையும் சூத்திரதாரியை இயக்கும் நிலைமைகள் உண்டு. பொம்மை பொம்மையாக இருந்து ஒத்துழைப்பதற்குப் பொம்மைக்கு சில சலுகைகள் கொடுக்கப்படுவது வழக்கம். அதுபோலவே ஜே.ஆர். கும்பல் அமெரிக்காவின் நிதியுதவியில் வாழ்ந்தாலும் சிலசில விஷயங்களில் தனிப்பட்டவிருப்பு வெறுப்புகளை காட்டிக்கொள்கின்றனர்.

உதாரணமாக திருமதி பண்டாரநாக்காவின் குடியியல் உரிமைகளைப் பறித்த பொழுது அமெரிக்க தூதுவர் அதற்கு மாறாகவே அபிப்பிராயம் தெரிவித்தாராம். பாராளுமன்ற முறையை அது சீர்குலைக்கும் என்பது அவரின் கருத்தாக இருந்ததாம். ஆனல் யூ. என். பி. தலைமை விடாப் பிடியாக நின்றுதான் எண்ணியதைச் செய்து முடித்தது. பதவிப் போட்டிக்கு எவரும் இருக்கக் கூடாது என்பதே இவர்களின் பிரதான நோக்கமாய் இருந்தது. ஆனல் பல சமயங்களில் அமெரிக்க ஆலோசகர்களின் அபிப்பிராயங்களை ஆட்சியினர் மதிப்பதே வழக்கம். உதாரணமாக தமிழர் வியாபாரக் கூட்டணியினரை மென்மையாக நடாத்தி கைக்குள் போடவேண்டும் என்பதே அமெரிக்காவின் ஆலோசனையாம். அதனை ஜே. ஆர். பெருமளவிற்குக் கடைப்பிடித்து வருவது கண்கூடு.

★

அன்று சிங்கத்தை அதன் குகையிலே சந்திக்கச் செல்கிறேன் என்று கூறியவர், இன்று பிச்சைவேண்டாம் நாயைப் பிடி என்று கெஞ்சுகிருர்.

## இவர் யார்?

(விடை 5-ம் பக்கம்)

# உயர் வர்க்கத்தினருக்கு மட்டுமே உயர்கல்வி!

# உத்தரவாதம் செய்கிறது வெள்ளை அறிக்கை

யூ. என். பி. அரசு இன்றுள்ள கல்வி முறைமையில் புகுத்தவேண்டிய சீர்திருத்தங்களுக்கான ஆலோசனைகளை எடுத்துரைக்கின்ற கல்வி வெள்ளையறிக்கை ஒன்றை மக்கள்முன் சமர்ப்பித்திருக்கின்றது. மேற்படி வெள்ளையறிக்கை பற்றிய பல்தரப்பட்ட அபிப்பிராயங்கள் கூறப்படுகின்ற இவ்வேளை, பத்தன்மையை' சுருக்கமாகப் பார்த்த பின்னர் 'சமத்துவ' கல்விக்கு ஏற்பட்டுள்ள கதியைப் பார்ப்போம்.

I

வெள்ளையறிக்கை பல தடவையும் கூறுவதுபோல ஒரு தேசியக் கல்வியை அமைப்பதே அதன் குறிக்கோள் என்றால் ஒருமுறை கல்வித்திட்டத்தை குப்பைத் தொட்டிக்குள் வீசியெறிந்தார்கள். இருந்தபோதும்

ஒரு மாணவன்

அமைப்பைப் பொறுத்தவரையில் இத்தக் கல்வி அமைப்பிலும் அதிகளவில் அதன் 'தொழில் முன்னிலைப் பாடம்' இங்கே 'வாழ்க்கை தொழிற்திறன்' என்ற அலங்கார வார்த்தையைப் பெற்றது போல அமைப்புகளின் பெயர்களும் அழகான சொல்லலங்காரத்தை பெற்றிருக்கிறது.

இத்தகைய சொல்லலங்கார மாற்றங்கள்தான் செய்யப்பட வேண்டியிருந்த தென்றால் சுதந்திரக்கட்சி அரசின் கையில் மேலதிகமாகச் சேர்க்கப்பட்டுள்ளது என்பதைத்தான் பின்னால் பார்க்க இருக்கிறோம். இப்போது உள்ள பிரச்சினை யு.என்.பி. பதவிக்கு வந்தவுடன் செய்த கல்வி மாற்றத்தின் உண்மைநிலையை விளங்கிக் கொள்வதேயாகும்.

உண்மையில் ஒரு மாற்றம் அப்போது யு.என்.பீ.

## ★ "ஒற்றைநிலைப் பாடசாலை" வசதி படைத்தோருக்கு ஒரு வரப்பிரசாதம்!

## ★ "கொத்தணி முறை"யால் கிராமப் பாடசாலைகள் புறக்கணிக்கப்படும்

'இது நன்கு சமநிலைப்படுத்திய ஒன்றிணைந்த தேசிய கல்வி முறைமையை உருவாக்கிக் காட்டுவதாக' கூறிக் கொள்வதில் எவ்வளவுதூரம் உண்மை இருக்கின்றது என்பதை ஆராயும் நோக்குடன் இக்கட்டுரை வரையப்படுகின்றது. இவற்றைத் தனித்தனியே இரு பகுதிகளாகப் பார்ப்பது வசதியாக இருக்கும் என்பதால் இதன் 'தேசி பின்னோக்கிச் சென்று சுதந்திரக்கட்சி அரசு அறிமுகப்படுத்தியிருந்த தேசியக் கல்வியின் சுவட்டை அழித்துத்தான் ஒரு புதிய பாதையை சிருஷ்டிக்க வேண்டுமா?

அன்று நடந்ததென்ன? இவர்கள் பதவிக்கு வந்த கையுடன் மிக அவசர, அவசிய பணியென்றுகூறி சுதந்திரக்கட்சி அரசின் தேசியக் வாடை வீசுவதைத்தான் காண முடிகின்றது. தேவைக்கேற்ப சில சொல்லலங்காரங்கள் சேர்த்துக்கொள்ளப் பட்டுள்ளது.

உதாரணத்திற்கு என். சி. ஜி. ஈ., ஏச். என். டி. ஈ. வகுப்புக்களுக்குரிய அமைப்பைத்தான் சில மாற்றங்களுடன் இங்கேயும் காண்கின்றோம். அங்கே இருந்த கல்வியமைப்பிலேயே தீர்க்கப்படவேண்டியிருந்த பிரச்சினைகளுக்குரிய தீர்வுகளைப்பற்றி ஆராய்ந்திருக்கலாம். அவ்வாறு செய்திருந்தால் ஓரளவாயினும் சமநிலைப்படுத்திய ஒன்றிணைந்த தேசியக்கல்விக்கான முயற்சியை முன்னெடுத்திருக்கக்கூடும். இந்தக் கதைக்கு இடமில்லாமல் செய்கின்ற அமைப்பு மாற்றங்கள் இந்த வெள்ளை அறிக் அரசுக்கு வேண்டியிருந்தது. அது செய்யப்படவில்லை என்றால் சுதந்திரக்கட்சியின் அரசியல் பொருளாதாரக் கொள்கைக்குப் பொருந்தும்வகையில் அமைக்கப்பட்ட கல்வியமைப்பு உருவாக்கும் இளைஞர்களைக் 'கட்டி மேய்க்க' முடியாது போய்விடும். இந்த இளைஞர்களிடமும் புதிதாகச்

(4-ம் பக்கம் பார்க்க)

# கொலை-கொள்ளைகளுக்கு பொறுப்புதாரிகள் யார்?

இலங்கையில் பௌத்த மதம் அரச மதமாக்கப்பட்டுள்ளது என்று பெருமை பேசிக்கொள்கின்றனர்; பாடசாலைகளில் மதககல்வி கட்டாய பாடமாக இருந்துவருகின்றது; அன்பு, கருணை, அகிம்சை, அமைதி என்பவற்றைப்பற்றி சகல மதங்களினதும் பிரசாரகர்கள் ஓயாமலுழைத்து மக்களுக்குப் போதித்து வருகிறார்கள். அரசின் தலைவர்கள் சில சந்தர்ப்பங்களில் நவீன புத்தர்கள்போல் உபதேச உரைகள் ஆற்றுகிறார்கள். இவை போதாது என்று சமூக அமைதிக்கும், சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதற்கும் ஏராளம் சட்டங்கள் ஆக்கப்பட்டு அவற்றை ஆயுதப் படைகளின் கைகளில் ஒப்படைத்துள்ளனர்.

இத்தனைக்கும் மேலால் நாட்டின் நாலா புறமும் கொலைகள், கொள்ளைகள், கற்பழிப்புகள், விபசாரம் போன்ற சமூக விரோதச் செயல்கள் பல்கிப் பெருகி வருகின்றன. வட பகுதியில் நடைபெற்ற சில கொலை கொள்ளைச் சம்பவங்களை அரசியல் கலப்புள்ளவை என்று கூறப்பட்டாலும், நாட்டின் ஏனைய பகுதிகளில் நடைபெற்று வரும் பெரும் கொள்ளை கொலைச் சம்பவங்களுக்கு எந்தவித சமாதானமும் கூறிவிட முடியாது. எந்த ஒரு பிரச்சினைக்கும் சமூக அடிப்படை என்பது இருப்பதுபோலவே கொலை, கொள்ளை, கற்பழிப்பு, விபசாரம் என்பனவற்றுக்கும் ஒரு சமூக அடிப்படை இருப்பதை விளங்கிக் கொள்வது அவசியமாகும்.

கொலை-கொள்ளை செயல்களும் ஏனைய சமூக விரோத செயல்களும் தனிச்சொத்துடைமையினதும் சுரண்டலினதும் உற்பவிப்பாகும். உலகிலேயே இன்று அதிக கொலை கொள்ளைச் சம்பவங்களுக்கு பெயர்போன நகரங்களை எடுத்துப் பார்த்தால் அவை முதலாளித்துவ ஏகாதிபத்திய நாடுகளின் நகரங்களாகவே காணப்படுகின்றன முதலாளித்துவ அமைப்பு முறையின் கீழ் சொத்துக்களும், சுகபோகங்களும் ஒரு குறிப்பிட்ட சிறுபகுதியினரிடமே இருக்கின்றது. ஏகப் பெரும்பான்மையான உழைக்கும் மக்கள் கோரமான சுரண்டலுக்கும், அரசியல் அடக்குமுறைக்கும் ஆளாக்கப்படுகின்றனர். பொருளாதார நெருக்கடிகள், வேலை இன்மை, உழைப்புக்கு ஏற்ற ஊதியம் இன்மை, பட்டினிக் கொடுமை, வறுமை என்பன மக்களை அதிருப்திக்கும் விரக்திக்கும் தள்ளிவிடுகின்றன. தமது வாழ்க்கை அபிலாஷைகளை பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் மக்கள் மத்தியில் விபரீதமான எண்ணங்களும் அவற்றைச் செயல் முறைகளாக்கவுமான நிர்ப்பந்தங்களும் ஏற்படுகின்றன. அதிகமாக இவ்வழிகளுக்கு ஈர்க்கப்படுபவர்கள் இளைஞர்களாகவே இருக்கின்றனர்.

முதலாளித்துவ அமைப்பு முறை பெயரளவில் ஜனநாயகம், சுதந்திரம் என்று வாய்ச்சவடால் அடித்தபோதிலும் அது சமூகத்தின் வசதிபடைத்த உயர் வர்க்கத்திற்கு மட்டுமே வாய்ப்புகளையும் சலுகைகளையும் பாதுகாப்பையும் வழங்கிவிடுகிறது. அதேவேளை உழைக்கும் மக்களை முதலாளித்துவம் வஞ்சித்து விடுகிறது. இதிலிருந்து வெளிக்கிளம்பும் விரக்தி நிலையே பலரைக் கொலைகொள்ளை சம்பவங்களுக்கு இட்டுச் செல்கின்றது. ஒருநாட்டின் சகல மக்கட்கும் வாழ்க்கை அபிலாஷைகட்கான உத்தரவாதத்தை வழங்கி அவர்களது சமூக அந்தஸ்தை உறுதிப்படுத்த முடியாத முதலாளித்துவ அமைப்பில் கொலை கொள்ளைச் சம்பவங்களை முடிவுக்கு கொண்டு வர முடியாது.

— வெகுஜனன் —

நமது நாடு பின்தங்கிய நிலையில் உள்ள மூன்றும் உலகைச் சேர்ந்த நாடாக இருந்தபோதிலும் அதனது பொருளாதார அரசியல் அமைப்பு முறைகள் முதலாளித்துவ அமைப்பு முறைகளை அடியொற்றியதாகவே இருந்துவருகின்றது. இன்றைய ஆட்சியாளர்கள் ஏகாதிபத்திய முதலாளித்துவ ஏகபோகக் கம்பனிகளையும் அதனது மூலதனங்களையும் இருகரம் கூப்பி வரவேற்கும் அதேவேளை அந்நாடுகளின் முதலாளித்துவ அரசியல் நுணுக்க முறைகளையும் நமது நாட்டில் நடைமுறையாக்கி வருகின்றனர். இவற்றுடன் கூடவே கட்டுப்பாடற்ற மேற்குலகின் சீரழிந்த கலாச்சாரங்களையும் நமது மக்கள் மத்தியில் பரப்புகின்றனர். சிக்காக்கோ நகரில் நடைபெற்ற திகிலூட்டும் கொலைச் சம்பவங்களையும், லண்டனில் நீண்ட நாள் திட்டமிடல் மூலம் நடைபெற்ற புகையிரதத்தில் இருந்து பணப்பைகள் கொள்ளையின் நுணுக்கங்களையும் சினிமா மூலமாகவும், சஞ்சிகைகள் மூலமாகவும் நமது நாட்டில் பரப்புதல்களைச் செய்பவர்கள் முதலாளித்துவ சக்திகளேயாவர். நமது வியாபாரம், பணம் சேகரித்தல், இளைஞர்களின் கவனத்தைத் திருப்புதல், கலாச்சார சீரழிவுகளை உண்டாக்குதல் என்பவற்றுக்காக மேற்குலகின் சீரழிவுகளை எல்லாம் தாராளமாகக் கொண்டுவந்து சமூகவிரோத செயல்களுக்கு வழிகாட்டும் நமது நாட்டு முதலாளித்துவ ஆசாமிகள் மறுபுறத்தில் நல்லொழுக்கம் சமூக அமைதி என்று உபதேசிக்கின்றனர். நமது நாட்டின் கலாச்சாரம், பண்பாடு என்பனவற்றுக்கு குழிபறிக்கும் இந்த முதலாளித்துவக் கூட்டம் மக்களை ஏமாற்றவெறும் வேஷங்களைமட்டும் தாங்கிக் கொள்கின்றனர்.

கொலை, கொள்ளை, கற்பழிப்பு விபசாரம் போன்ற சமூக விரோத செயல்களைக் கம்யூனிஸ்டுகள் வெறுக்கின்றனர்; கண்டிக்கின்றனர். அவற்றை எந்த சந்தர்ப்பத்திலும் ஆதரிப்பது கிடையாது. ஆனால் அவற்றைப் பார்க்கும் கண்ணோட்டத்திலேயே முதலாளித்துவ வாதிகளிடமிருந்து வேறுபடுகின்றனர்; அவற்றுக்கு இருக்கும் சமூக அடிப்படையையே கம்யூனிஸ்டுகள் வற்புறுத்துகின்றனர். 'மனிதனின் சமூக வாழ்வே அவனது சிந்தனையை நிர்ணயிக்கின்றது' என்பதே கம்யூனிஸ்டுகளின் தாரக சித்தாந்தம். எனவே தனிச் சொத்துடமையும் சுரண்டலும் நிலவுகின்ற முதலாளித்துவ அமைப்பு முறை என்ற சமூக அடிப்படை மாற்றி அமைக்கப்பட்டாலே கொலை கொள்ளை சம்பவங்களுக்கும் ஏனைய சமூக விரோத சம்பவங்களுக்கும் முடிவுகட்ட முடியும்.

ஆதலால் கொலை கொள்ளைகளினதும் ஏனைய சமூக விரோத செயல்களுக்கும் உண்மையான பொறுப்புதாரிகள் ஆளும் வர்க்கமாக உள்ள முதலாளித்துவவாதிகளேயாவர் என்பதே உண்மையாகும்.

★

# வெள்ளை அறிக்கை - தேசிய அபிலாஷைகளை நிராகரிக்கிறது

3-ம் பக்கத் தொடர்......

சமூகத்துக்குள்ளே பிரவேசிக்கவுள்ள இளைஞர்களிடம், தேசிய முதலாளி வர்க்க சிந்தனைகள் 'அறவே இல்லா தொழிக்கப்பட்டு' பெரு முதலாளி வர்க்க நலன் பேணும் சிந்தனைகள் புகுத்த வேண்டியிருந்தது.

இக்காரணத்தினால் சுதந்திரக்கட்சி அரசின் பாடநெறிக்குப் பதிலாக தாராள இறக்குமதிக்கொள்கை, சுதந்திர வர்த்தக வலயம், தனியார் துறை ஊக்குவிப்பு போன்ற, மாற்றி அமைக்கப்பட்ட பொருளாதாரக்கொள்கைகளுக்கு பொருந்தக்கூடிய ஒரு புதிய பாடநெறி அறிமுகப்படுத்தப்பட வேண்டியிருந்தது. அதைத்தான் யூ. என். பி. அரசு பதவியேற்ற கையுடன் செய்திருந்தது.

அந்த மாற்றத்தின்மூலம் சுயசார்புக்கொள்கை, சுதந்திர தேசிய பொருளாதாரத்திற்கான அவா போன்றன மாணவர்களின் உணர்வையும் அறிவையும் தொட்டுவிடாத வண்ணம் மிகக் கவனமாகத் துடைத்துக்கட்டி வீசியெறி தரிசனத்துடன் அறிந்து மூளையிலே கெல்லி எறியவில்லையென்றால் மேற்குடி மக்களின் நலன்தான் என்னவது

இதற்கு என்னதான் செய்யலாம்? ஆம்! பஞ்சப்பட்டாளம் பெரும் பட்டப்படிப்பை எட்டாமல் தடுத்துவிடவேண்டும்; அவர்கள், மேற்குடி மக்களின் சுகபோக வாழ்வுக்கு செல்வம் பெருகும் வண்ணம் முழுமையாக உழைக்கும் 'திறன்' 'மனப்பான்மை' என்பவற்றைப் பெற்றால் போதும்; வசதி படைத்தவர்களின் பிள்ளைகள் மட்டுமே உயர்கல்விபெற வழிசமைத்தாக வேண்டும்.

— இந்த அதியுன்னத பணிகள் நிறைவு செய்யத் தக்கவாறே வெள்ளையறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம், கல்வியிலே தேசியத் தன்மையைப் பூண்டோடு ஒழிக்கும் வகையில், முதலாளித்துவ, சமத்துவ கல்விக்குங்கூட சாவுமணியடிக்கும்வகையில், வசதி படைத்தோர்க்கே உயர்கல்வி என்பது உத்தரவாதம் செய்யப்படும் வகையில், திட்டமிட்ட அமைப்பு முறைகள் புகுத்தப்பட்டுள்ளது.

தைப்' பெற்றிருப்பார்கள். ஏனென்றால் "இப்பாடத்தின் நோக்கம் பிள்ளைகளை வேலை உலகுக்கு, அறிமுகப்படுத்தி தொழில் மகத்துவம்பற்றி நேர்நிலையான மனப்பான்மையை ஊன்றுதலாகும்." இதனால் பெரும் தொகையினரான மாணவர்கள் மனக்கிலேசம் ஏதுமின்றியே தங்கள் பரம்பரைத் தொழிலைப் பார்க்கப் போய்விட வேண்டும். அறிவு அதிகமாக இருந்தால் அதை வைத்து என்ன செய்வதென்று கவலைப்பட வேண்டியதில்லை — தொழில் நுட்பத்தில் மேற்படிப்புப் படிக்க வசதிசெய்து தரப்படுமாம்!!

இது ரூஷோவின் சமூக அந்தஸ்த்துக்கு ஏற்ற கல்வி அமைப்பைத்தான் படம் பிடித்துக் காட்டுகிறது; இந்தியாவில் இன்னும் சிலர் வாதிடும் வருணாச்சிரம கல்வி முறையின் சுவட்டைத்தான் இது பின்பற்றியிருக்கிறது.

இப்படி நாம் சொல்வதற்குப் போதிய காரணம் இருக்கின்றது. இந்த வெள்ளையறிக்கை பயனற்ற நூற் கல்வியாகிய' உயர்

ஏற்றத்தாழ்வான சமூக—பொருளாதார அமைப்பின் நிச்சயமாக பின்தங்கிய பகுதிகளுக்கு நன்மை பயக்கப் போவதில்லை. அவை தேவையான வசதிகளைப் பூர்த்தி செய்யாமல், ஆண்டிப்பிழைக்கவிடப்பட்ட வசதி குறைந்த பாடசாலைகளைத்தான் உருவாக்கும்; அங்குள்ள வறிய குடும்பங்களின் பிள்ளைகள் இக்கொத்தணிக்குள் சமூக ரீதியான பல சிக்கலான பிரச்சினைகளை எதிர்கொள்ளவேண்டியவர்களாவர். இந்த சமூக—பொருளாதார அமைப்பின் நிர்ப்பந்தம் அருளாமல் கொள்ளாமல் வருணாச்சிரமக் கல்விக்கு அவர்களை ஆட்படுத்திவிடும்.

இக் கொத்தணிக்குள் ஓரளவு வசதிபடைத்தோர் சலுகை அனுபவிக்க முடியும். இருந்தபோதும் முழுமையாகப் பார்க்கும்போது இவர்களும் நசுக்கப்படுகிறார்கள். இவர்கள் உயர்வசதி படைத்தோருடன் போட்டியிட முடியாதிருக்கும். உயர் வசதிபடைத்தோரின் பிள்ளைகளுக்கென்று மிகப் பெரிய பாடசாலைகள் பிரத்தியேகமாக ஒதுக்கிக் கொடுக்கப்பட்டுள்ளது. 'ஒற்றை நிலைப் வர்கள் என்பதால் உயர் கல்வியைக் கற்கும் போட்டி இவர்களுக்குரியதாகவே இருக்கும்.

இவ்வாறு கல்விபெறும் உரிமையில் ஏற்றத்தாழ்வு முழுமையாக்கப் படுவதால் அதன் வெளிப்பாடாக இன ரீதியான புறக்கணிப்புக்களும் அனுமதிக்கப்படுகின்றது. இக்காரணத்தினாலேயே சிறுபான்மை இனங்கள் மத்தியில் கொத்தணிமுறைஅதிக அளவு சந்தேகத்தைக்கிளப்பியிருக்கிறது. இது நியாயமானதே.- வேறுபட்ட இன-மத மக்கள் வாழ்கின்ற சூழலில் உள்ள சிறுபான்மை இனங்கள் பாதிப்படையவே செய்யும். இருந்தபோதிலும் இது வர்க்கப் பிரச்சினையின் ஒரு வடிவம் என்பதையே நாம் நினைவில் கொள்ளல் வேண்டும். மிகப் பெரும்பான்மையான சிங்கள மாணவர்களையும் இக்கொத்தணி. ஒற்றை நிலைப் பாடசாலை என்ற அமைப்புகள் பாதிக்கின்றது. எனவே மொத்தத்தில் உழைக்கும் சிங்கள வெகுஜனங்களுடன் ஐக்கியப்பட்டு

## ★ வறிய மாணவர்கள் குலத்தொழிலுக்கு விரட்டப்படுவர்
## ★ நவகாலனித்துவ அடிமை அமைப்பைக் கட்டிக்காக்கிறது

யப்பட்டு, அந்த இடத்தில் 'எல்லாம் வல்ல' அந்நிய மூலதனத்துக்கு நாட்டை தாரை வார்த்துக் கொடுக்கும் பொருளாதாரக் கொள்கைக்குப் பொருத்தமான அறிவு புகட்டப்பட வழி செய்யப்பட்டது.

இந்த மாற்றம் உடனடிப் பிரச்சினை என்ற வகையில் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பெருந் தலையிடி என்பதுடன நீண்ட காலத்தில் நாட்டின் சுதந்திர தேசிய பொருளாதாரத்தை கட்டியமைப்பதற்கும் பெரும் இடையூறாகும். இந்த இடையூறு ஒருகால் பரந்துபட்ட வெகுஜனங்களின் புரட்சிகர அணிகளிலிருந்துவரும் மாணவர்களால் கிரகித்துக்கொள்ளப்படும். அவர்கள் உயர் கல்விபெற்றுப் பெரும் பதவி பெறுவார்களேயானால் தாம் வகிக்கும் பதவிகளைத் துணையாகக்கொண்டே மாற்றத்தைத் தூண்டும் நடவடிக்கைகளில் இறங்கி யூ.என்.பி.யின் உயர்வர்க்க நலனுக்கு பெரும் முட்டுக்கட்டையாக இருப்பார்கள். இதைத்தீர்க்க

II

உயர் கல்வி பெறும் வாய்ப்பு, வசதி படைத்த வர்க்கத்தின் தனியுரிமையாக்கப்படுவதற்கு அரசு வகுத்து உள்ள திட்டங்களைப் பார்ப்போம்.

அரசு வெளியிட்டுள்ள வெள்ளை அறிக்கையாவது, இன்றைய கல்விச் சீர்திருத்தத்துக்கான அவசியத்தைப் பற்றி இப்படியும் சொல்கிறது:

புதிய சீர்திருத்தம் "...... பயனற்ற நூற் கல்விப் பயிற்சி நெறியை பின்பற்றுகின்ற விரக்திதரும் அனுபவத்தை பெரும் தொகையினரான மாணவர்க்கு இல்லாமல் செய்யும்". இந்தப் பயனற்ற நூற்கல்வியைத் 'தகுதி பெற்ற' சிறுதொகையினர் பின்பற்றட்டும்; ஏனைய பெருந் தொகையினரான மாணவர்கள் ஆரம்பத்திலேயே வாழ்க்கைத் தொழிற் திறன்கள்' என்ற பாடத்தின் வாயிலாக விரக்தியை விரட்டியடிக்கும் 'பக்குவத்

கல்வியை வசதிபடைத்தோர் மட்டுமே பெறக் கூடிய வகையில் பாடசாலைகளின் அமைப்பை மாற்றும் ஆலோசனையை முன்வைத்திருக்கின்றது.

இப்புதிய மாற்றத்தின் மூலம இன்றைய பாடசாலை ஒழுங்கமைப்பு மாற்றப்பட உளளது. இப்போதுள்ள சுமார் 9,500 பாடசாலைகளும் ஏறக்குறைய 1000 குழுக்களாக கொத்தணிகளாகத் தொகுக்கப்படும். 3000 மாணவர்களைக்கொண்ட 10 பாடசாலைகள் ஒரு குழுவாக ஒரு கொத்தணியாக இருக்கும். இந்த பத்துப் பாடசாலைகளும் தமக்குள்ளே ஒன்றின் வளத்தை மற்றது பெற்றுக்கொள்ளலாம். ஏதாவதொரு பாடசாலைக்குப் போதிய வசதி இல்லையென்றால் அதற்காக வருத்தப்பட வேண்டியதில்லை —அந்த வசதியைக்கொண்டிருக்கும் தனது குழுவைச் சேர்ந்த வேறொரு பாடசாலைக்குப் போய்வரலாம்.

இப்படி வளத்தைப் பங்கிடுவது என்பது இன்றைய பாடசாலைகளான' அவை அரசாங்க சம்பளம்பெறும் ஊழியர்களைக் கொண்டியங்கும் 'ஒருவகைத் தனியார் பாடசாலைகளாக' இருக்கும். "அவை அரசாங்க உதவியிலேயே தங்கியிருப்பதற்குப் பதிலாக தற்சார்புடையனவாவதற்குச் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டால் இன்னும் சிறப்பாக தொழிற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது'. ஏனென்றால் தங்களுக் முழுச்சொத்தாக ஆகிவிட்ட பின்னர் தானே உயர்குடி மக்களால் மனப்பூர்வமான கவனிப்பை செலுத்தக்கூடியதாக இருக்கும். அவர்களின் பணத்திலே அப்பாடசாலை விருத்திபெற்று தனிச்சிறப்பு பெற்ற அப்பாடசாலையில் அவர்களது சிறார்கள் கற்றுத் தேர்வர். அங்கே கற்கும் உயர்குடிப்பிறப்புகள் கட்டாய பாடமான ஆங்கிலத்தை வீட்டிலும் பேசிவருப

சகல சிறுபான்மை இன மக்களும் இம்முறையை எதிர்த்துக் குரல்கொடுக்க வேண்டும். இத்தகைய ஐக்கியப்பட்ட போராட்டத்தின் மூலமாக மட்டுமே கடந்தகாலத்தில் பலதரப்பட்ட போராட்டங்களின் வாயிலாக வென்றெடுத்த ஓரளவாவது சமநிலைப்படுத்திய ஒன்றிணைந்த தேசியக் கல்வியைப் பாதுகாக்கவும் முன்னெடுக்கவும் முடியும்.

சுதந்திரமான இறைமையுள்ள ஒரு அரசின்கீழ் தன்னிறைவான சுதந்திர - தேசிய பொருளாதார அமைப்பு ஒன்றை நிர்மாணிப்பதன் வாயிலாகவே இனங்களிடையே பரஸ்பரம் புரிந்து—ஒன்றிணைந்து வாழ்வதையும், மக்கள் அனைவரும் சமகல்வி பெறுவதையும், உத்தரவாதம் செய்ய முடியும் என்பதால் இக்குறிக்கோளை எதிர்கொண்டு ஐக்கியப்பட்ட போராட்ட இயக்கத்தை முன்னெடுப்பது அவசியமாகும்.

★

## மத்திய கிழக்கு....

(5-ம் பக்கத் தொடர்)

சவூதித்திட்டம் நன்கு ஆராயப்பட வேண்டியது ஒன்றாகும்.

சவூதி திட்டத்தை இஸ்ரேல் கண்டித்து நிராகரித்ததை ஓரளவு நாம் எதிர்பார்க்கலாம். ஆயினும் 'சோஷலிச' நாடான சோவியத் யூனியன், பாலஸ்தீன மக்களின் 'தீவிர நண்பன்" என்று தன்னைத்தானே கூறிக்கொண்டும் இத்திட்டத்தைக் கண்டிப்பது கவனிக்க வேண்டியதாகும். ஆரம்பத்திலிருந்தே ஐ. நா. சபை வலியுறுத்திவந்துள்ள மூன்று கோட்பாடுகள் சவூதி திட்டத்தில் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது. 1967 ஆம் வருடம் நடைபெற்ற அரபு இஸ்ரேல் யுத்தத்திலே இஸ்ரேல் கைப்பற்றிய அரபு பிரதேசங்களைப் பலஸ்தீனிய மக்களுக்கு மீண்டும் உரிமையாக்குவது; பாலஸ்தீன மக்களுக்கு தேசிய உரிமைகளை உறுதிப்படுத்தி வழங்குவது மத்தியகிழக்கில் நாடுகள் சகஜீவனம்நடாத்துவது. இவை மூன்றுமே ஐ. நா. சபை காலத்துக்குக் காலம் நிறைவேற்றி வந்திருக்கும் தீர்மானங்களாகும். சவூதித் திட்டம் இவற்றை உட்கொண்டுளது.

அண்மையில் சோவியத் பத்திரிகையான 'இஸ்வெஸ்தியா' சவூதித் திட்டம்பற்றி எழுதுகையில், இஸ்ரேலை அரபுநாடுகள் அங்கீகரிப்பதற்கான சூழ்ச்சித் திட்டம் இது என்று குறிப்பிட்டிருக்கிறது. பூரண சமாதானம் ஏற்படும்வரை பெரும்பாலான அரபுநாடுகள் இஸ்ரேலை ஆதரித்து ராஜீய உறவுகளை வளர்த்துக்கொள்ள விரும்பவில்லை என்பது வெளிப்படை. அதனை ஓரளவு நாம் விளங்கிக் கொள்ளவும் முடியும். ஆனால் தனது சுயநலத்துக்காக அரபு அதிதீவிரவாதத்திற்குத் தூபம் போடும் சோவியத்யூனியன் இஸ்ரேலை அங்கீகரிப்பதுபற்றிக் குறிப்பிடுவது விசித்திரமாக இருக்கிறது. சவூதித் திட்டம் ஏகாதிபத்தியத்துக்கு அரபு நாடுகளை அடிபணியச் செய்யும் திட்டம் என்று சோவியத் தலைவர் பிரஷ்னேவ் கூறினார். இஸ்ரேல் அங்கீகாரம் பற்றி சோவியத் யூனியன் குறிப்பிடுவது சொல்லுக்கும் செயலுக்கும் முரணாக இருப்பதை எவரும் கண்டுகொள்ளலாம். 1947 ஆம் வருடம் பாலஸ்தீனத்தைக் கூறுபோடும் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட நாளிலிருந்து அதாவது இஸ்ரேல் உருவாகிய காலத்திலிருந்து சோவியத்யூனியன் அந்நாட்டை அங்கீகரித்து ராஜதந்திர உறவுகள் கொண்டு வந்துள்ளது. எனவே இஸ்ரேலை அங்கீகரித்த முதல் தொகுதி நாடுகளுள் சோவியத்யூனியன் ஒன்று என்பது வரலாறு அறிந்த செய்தியாகும். அவ்வாறிருக்கவும் முழுப்பூசணிக்காயை சோற்றுக்குள்மறைக்க முற்படுவதுபோல அரபுநாடுகள் இஸ்ரேலை ஆதரிக்கக்கூடாது என்று ரஷ்யா கூறுவது அதன் சுயநலத்தையே தெளிவாக்குகிறது. அரபு இஸ்ரேலிய எதிர்ப்பு சோவியத் யூனியனுக்கு வாய்ப்பாக உள்ளது. முரண்பாட்டின் விளைவாக யுத்தத் தேவைகளுக்கு சில அரபு நாடுகள் இராணுவ தளபாடங்களை ரஷ்யாவிடமிருந்து வாங்குவதும், ரஷ்யாவுடன் 'நட்புறவு' ஒப்பந்தங்கள் செய்துகொள்வதும் காணக்கூடியதாய் இருக்கிறது. ரஷ்யாவின் விஸ்தரிப்பு நோக்கங்களுக்கு இது பயன்படுகிறது. தனது நிழலிலும், ஆதரவிலும் சில அரபுநாடுகள் இப்பொழுது இருப்பதை நீடிப்பதற்காகவே ரஷ்யா சவூதித் திட்டத்தை வன்மையாகக் கண்டித்துள்ளது. சவூதித் திட்டத்திற்கு பதிலாக தானும் கலந்துகொள்ளும் வட்ட மேசை மாநாட்டை முன்வைக்கின்றது.

வல்லரசுகள் தமது சுயநலங்களையே கவனிக்கின்றன என்பதை அரபுநாடுகள் உணரும்பொழுதே மத்திய கிழக்கில் ஸ்திரமான சமாதானம் ஏற்பட முடியும். மத்திய கிழக்கு பிரச்சினை மிகத் தெளிவாக மேலாதிக்க வல்லரசுகளின் போட்டாபோட்டியையும் உலக சமாதானத்துக்கு அப்போட்டி உண்டாக்கும் விளைவுகளையும் நமக்குக் காட்டுகிறது.

★

### மலையக ஆசிரியர் தெரிவில்

# தொழிலாளர் பிள்ளைகளுக்கு முன்னுரிமை வேண்டும்!

## மலையகச் செய்திகள்

எதிர்வரும் தை மாதத்தில் நாடு முழுவதிலும் 5000 ஆசிரியர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர். இதில் 402 ஆசிரியர்கள் மலையகத்தில் இருந்து தெரிவு செய்யப்படவுள்ளனர். மலையகத்திற்கு தேவையான ஆசிரியர்கள் மலையகத்தில் இருந்தே தெரிவு செய்யப்படல் வேண்டும். அதற்கான தகுதிபெற்ற படித்த இளைஞர்கள் இருக்கின்றார்கள். தகுதியானவர்கள் இல்லை, என்ற சாக்குப் போக்குக் கூறி மலையகத்திற்கு அப்பால் ஆசிரியர்கள் தெரிவுசெய்யப்படுவதை எக்காரணம் கொண்டும் அனுமதிக்கக் கூடாது.

இன்று ஜி. சி. ஈ. (உயர்தரம் — சாதாரணம்) பரீட்சைகளில் சித்தியடைந்த தகுதியானவர்கள் மலையகத்தில் உள்ளனர். இதில் நாம் குறிப்பாக சுட்டிக்காட்டுவது என்னவெனில் இந்த ஆசிரியர் தெரிவில் தொழிலாளர் குடும்பங்களில் உள்ள இளைஞர்களுக்கே முன்னுரிமை வழங்கப்படவேண்டும் என்பதாகும். இவ்வாறு முன்னுரிமை வழங்கப்படுவது அக்குடும்பங்களுக்கு சிறு உதவியாகவும், தோட்டப்புற பாடசாலைகளினதும், தோட்டச் சிறார்களினதும் கல்வி வளர்ச்சிக்குப் பெரும் உதவியாகவும் அமையும். எனவே இம்முன்னுரிமை விடயத்தை ஏனைய தொழிற்சங்க பொது ஸ்தாபனங்களும் வற்புறுத்தல் வேண்டும்.

★

### செல்லச்சாமிக்கு

# செட்டித்தெருமீதே நாட்டம்!

தோட்டத் தொழிலாளர்களின் நலன்தான் தமது நலன் என்றும், தோட்டத் தொழிலாளர்களுக்கு இன்னல்கள் வந்தால் இம்மியளவும் பொறுத்துக்கொள்ள மாட்டோம் என்றும் குமுறுபவர்கள் இ. தொ. கா. தலைவர்கள். அதில் ஒருவர்தான் திரு. செல்லச்சாமி ஆவார். அவர் இப்போது மலையகத்தில் நிற்பது மிகக் குறைவு. ஏதாவது கருத்தரங்கு நடந்தால் மட்டும் தலையைக் காட்டி புதுப்புதுக் கதைகள் அளந்துவிட்டுச் சென்றுவிடுவார். பத்திரிகைகளில் கொட்டை எழுத்துக்களில் ''செல்லச்சாமி ஜனாதிபதிக்கு மகஜர் கொடுத்தார்; தந்தி அடித்தார்; அமைச்சருக்கு கடிதம் எழுதினார்'' என்ற செய்திகள் மட்டுமே வரும் தவிர ஆளைக்காண முடியாது. காரணம், அவர் கொழும்பு வாசியாகிவிட்டார். கொழும்பிலும் குறிப்பாக செட்டித்தெருப் பக்கத்தில்தான் கூடியளவு நேரத்தைச் செலவு செய்கிறார்; செலவு செய்கிறார் என்றால் சேவை செய்கிறார் என்றுதான் கூறவேண்டும். அங்கே தோட்டத் தொழிலாளர்கள் இருக்கிறார்களா? இல்லை. அங்கே பெரிய பணமுட்டைகள் வாழ்கிறார்கள். அந்தப் பணமுட்டை வர்க்கத்திற்கே செல்லச்சாமி தனது அழகான காரில் பவனிவந்து விசுவாசமாக சேவை செய்கிறார். வர்க்கம் வர்க்கத்தைத்தானே நாடும். இதற்கு செல்லச்சாமி மட்டும் விதிவிலக்காக இருக்க முடியாதே!

★

### வேலைநிறுத்தம்

## வேண்டாம்?

'தொழில் தருபவர்களோடு தொழிற்சங்கங்களோ தொழிலாளர்களோ பேச்சுவார்த்தைகள் நடாத்துவதன்மூலம் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முடியும் என்ற நம்பிக்கை இன்று ஏற்பட்டிருக்கிறது. வேலை நிறுத்தங்கள்தான் பிரச்சினைகளை தீர்க்கும் வழி என்ற நிலையில் மாற்றம் ஏற்பட்டுளது'.

—கொள்ளுப்பிட்டி கருத்தரங்கில் செல்லசாமி உரை.

## உலக அரங்கம் — அங்கும் இங்கும்

# மத்தியகிழக்குப் பிரச்சினைக்கு சவூதியின் சமாதானத் திட்டம்

மேற்கு ஆசியாவிலே அதாவது மத்திய கிழக்கிலே அரபு —இஸ்ரேலிய பிரச்சினை தோன்றிய காலமுதல் எத்தனையோ சமாதான முயற்சிகளும், சமரச எத்தனங்களும் முன்வைக்கப் பட்டுள்ளன. ஆயினும் அவை மொத்தத்தில் எத்தகைய பயனையும் இதுவரை அளிக்கவில்லை. சமீபத்திலே சவூதி அரேபியா எட்டு அம்சத்திட்டம் ஒன்றை முன்வைத்திருக்கிறது. சமாதானத்தை நோக்கமாகக் கொண்ட இத்திட்டம் இப்பொழுது உலகின் கவனத்தை ஈர்த்திருக்கிறது எனலாம்.

மத்திய கிழக்குப் பிரச்சினையை வரலாற்று அடிப்படையில் நோக்கும்போது இரு அம்சங்கள் மிகத் தெளிவாக உள்ளன. பிரச்சினையின் அடிப்படைக்காரணம் இஸ்ரேலிய ஆக்கிரமிப்பும் விஸ்தரிப்பு முயற்சியுமாகும். பிரச்சினையின் பிரதான அம்சம் பாலஸ்தீன நிலைமையாகும். ஆகவே பாலஸ்தீன பிரச்சினைக்கு ஒரு சுமுகமான முடிவு காணும்வரை மத்திய கிழக்கில் நிரந்தர சமாதானம் ஏற்படமாட்டாது.

அரபு நிலப் பிரதேசங்களில் அலட்சியத்துடன் ஆக்கிரமிப்புச் செய்துகொண்டிருக்கும் இஸ்ரேல் சமாதான முயற்சிகளுக்கும் முட்டுக்கட்டையாக இருந்துவருவது வேறு காரணங்களுக்காக இன்னும் ஆதரிக்கவில்லை. வல்லரசுகள் மத்திய கிழக்கு விவகாரத்தில் எத்தனை சுயநலத்துடனும் கபடநோக்குடனும் நடந்துகொள்கின்றன என்பதை மத்தியகிழக்குநாடுகள் நன்கு உணர்ந்துள்ளன.

ஒட்டுமொத்தமாக சவூதித்திட்டம் ஆக்கபூர்வமான அம்சங்கள் பலவற்றைக் கொண்டிருப்பினும்இன்றைய சூழ்நிலையில் அரபுநாடுகள் மத்தியில் அபிப்பிராயபேதம் இருப்பது எதிர்பார்க்கக் கூடியதே. அடிப்படையில் இரு கண்ணோட்டங்களும் நிலைப்பாடுகளும் எழுந்துள்ளன. ''நிதானக் கொள்கை'' மேற்கொள்ளும் அரபு நாடுகள் சவூதித்திட்டத்தை வரவேற்று ஆதரிக்கின்றன. 'கடும்பிடி' மனோபாவத்தை உடைய நாடுகள் அதனை எதிர்த்து நிராகரிக்கின்றன. இவ்விரு நிலைப்பாடுகளுக்கிடையே எகிப்துதான் முன்னர் இஸ்ரேலுடன் அமெரிக்க ஆதரவில் செய்து கொண்ட காம்ப்டேவிட் உடன்படிக்கை சேர்த்து ''முன்னேற்றம்'' காண விரும்புவதாய்த் தெரிகிறது. இவற்றைப் பார்க்குமிடத்து அரபு உலகம் கருத்தொருமைப்பாடு இல்லாமலிருப்பது தெளிவாகிறது. ஆயினும் உண்மையில் அரபு நாடுகளின் அங்கீகரிக்கப்பட்ட கண்ணோட்டத்தினுலேயே சமாதானத்திட்டம் வெற்றி பெறுதல் சாத்தியமாகும்.

நவம்பர்மாத நடுப்பகுதியிலே வளைகுடா நாடுகளான சவூதி அராபியா, குவைத், பாரெயின், கட்டார், ஓமான் ஐக்கிய அரபு எமிரேட் ஆகியன கூடி சவூதி திட்டத்தை எடுத்துள்ளன: இந்நாடுகள் மத்தியகிழக்கில் வல்லரசுகளின் மேலாதிக்கத்தை பெருமளவுக்கு எதிர்க்கின்றன. தமது செல்வாக்கைப் பயன்படுத்தி அரபு நடுநிலைமையை நிலைநாட்ட எத்தனித்து வந்திருக்கின்றன. அதே சமயத்தில் இவை பாலஸ்தீனிய மக்களின் விடுதலை வேட்கையையும் தேசிய அபிலாஷைகளையும் ஆதரித்து வந்திருக்கின்றன. அதனுலேயே சவூதி திட்டம் யதார்த்த பூர்வமான கூறுகளைக்கொண்டிருப்பதாக இவை துணிந்து கூறியுள்ளன.

பாலஸ்தீனிய மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தலைவர் யசீர் அரபாத் சவூதித் திட்டத்தை மொத்தத்தில் 'பயனுள்ளது' என விவரித்திருக்கிறார். ஆயினும் அவ்வியக்கத்தின்சில பிரமுகர்கள் — குறிப்பாக சோவியத் சார்புடைய தலைவர்கள் திட்டத்தின் சில அம்சங்களைக் கண்டித்துள்ளனர். பரஸ்பர பேச்சுவார்த்தைகளினுலும் ஆக்கபூர்வமான நிலைப்பாட்டைக் கடைப்பிடிப்பதனுலுமே பாலஸ்தீன இயக்கம் உட்பட அரபு நாடுகள் ஓர் உடன்பாட்டுக்கு வர முடியும். அரபு நாடுகளில் பதினைந்து கோடி மக்கள் வாழ்கின்றனர். உலகில்குறிப்பிடத்தக்க சக்திகளில் ஒன்ருக அரபு உலகம் இன்று விளங்குகிறது. அம்மக்களின் நல்வாழ்வு சமாதானத்திலேயே தங்கியுள்ளது. ஆகவே

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இஸ்ரவேல் எதிர்க்கிறது; காரணம் உண்டு

## சோவியத் யூனியன் எதிர்ப்பது ஏன்?

யம் இஸ்ரேல் அமெரிக்காவிற்கு இரண்டாயிரத்துஐந்நூறு கோடி டொலர் கடனுக்கு கொடுக்க வேண்டியுளது. பணவீக்கம் நூற்றுமுப்பத்தேழு தசம் ஆறு (137·6) வீதத்தில் இருக்கின்றது.

இதனுல் இஸ்ரேல் மக்கள் மத்தியில் சமாதானத்துக்கான விருப்பம் அண்மைக்காலத்தில் பெருகியிருக்கிறது சமீபத்தில் நடந்த பொதுத் தேர்தலில் எதிர்க்கட்சிக்குக் கிடைத்த வாக்குகள் சமாதானத்துக்கான வாக்குகளே என்றுல் தவருகாது. தேசிய அடிப்படைகளிலும் சர்வ

கடந்த முப்பது வருடங்களுக்கு மேலாக அரபு-இஸ்ரேலிய மோதல் இருந்து வந்திருப்பதைப் பலரும் அறிவர். உலகின் மிகச்சிக்கலான பிரச்சினைகளில் ஒன்ருக இது இருந்து வந்துள்ளது. இந்த முப்பதாண்டு காலப் பகுதியில் மத்தியகிழக்கில் நான்கு யுத்தங்கள் நடைபெற்றன. இவற்றுல் அரபு நாடுகளுக்கு மாத்திரமன்றி இஸ்ரேலுக்கும் பெரும் நஷ்டங்கள் விளைந்துள்ளன. வெளித்தோற்றத்துக்கு இஸ்ரேல் 'வெல்லமுடியாத' இராணுவ பலமுள்ள நாடாகத் தோற்றமளிக்கக் கூடும். ஆனல் இந்த இராணுவபலம் இஸ்ரேலிய சாதாரண மக்கட்கு சொல்லொணுத் துன்பச் சுமைகளை ஏற்றி வந்திருக்கிறது. இராணுவ செலவினங்கள் இஸ்ரேலின் பொருளாதாரத்தின் பெரும்பகுதியை விழுங்கிவந்துள்ளன. தற்சமதேச அடிப்படையிலும் இன்றைய இஸ்ரேலிய அரசாங்கத்தின்போக்கு பலத்த கண்டனத்துக்கும் விமர்சனத்துக்கும் உட்பட்டுவருவது கண்கூடு.

இத்தகைய சூழ்நிலையிலேயே சவூதிஅரேபியா சமாதானத் திட்டம் முன்வைக்கப்பட்டிருக்கிறது. இறுதி ஆய்விலே அரபு—இஸ்ரேலிய மக்கள்தான் தமது நீண்டகால பிரச்சினையை தீர்த்துவைக்க வேண்டும். ஆயினும் சமீபத்திய சவூதி அரேபியா திட்டத்தை நோக்கும்பொழுது அதில் பல நல்லம்சங்கள் அடங்கியிருப்பதைக் கவனிக்காமல் இருக்கமுடியாது. அதனுலேயே நவம்பர் இருபத்தைந்தாம் திகதி மொரோக்கோவில் நடைபெற்ற அரபு லீக் மகாநாட்டில் அது ஆராயப்பட்டது.

கிறது. பாலஸ்தீன மக்களின் தேசிய உரிமைகளை மறுத்து அவர்களுக்குஎதிராக இயங்கி வருவதன்மூலம் இஸ்ரேல் அரசியல் தர்மத்தையும் மனித தர்மத்தையும் துச்சமாகக் கருதி வந்துளது. சவூதி அரேபியாவின் சமாதானத் திட்டம் முன்வைக்கப்பட்ட உடனேயே அதனை அப்படியே இஸ்ரேல் நிராகரித்துவிட்டது. அதன்சாதக பாதகங்களை ஆராய முயலக்கூட இல்லை.

இஸ்ரேலின் ஒருதலைப்பட்சமான போக்கு ஒருபுறமிருக்க மேலாதிக்க வல்லரசுகளின் போட்டாபோட்டியும் மத்தியகிழக்கில் சமாதான சாத்தியப்பாட்டைச் சிக்கலாக்கி வருகிறது. உதாரணமாக அண்மையில் சவூதி அரேபியா வெளியிட்ட சமாதானத் திட்டத்தை அமெரிக்காவும் ரஷ்யாவும் வெவ்

விடை

## அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம்

# தோட்டத்தொழிலாளருக்கு சம்பளஉயர்வு மறுப்பு

# தொண்டமான் அமெரிக்காவுக்கு பறப்பு!

அண்மையில் நிதியமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தில் தோட்டத் தொழிலாளர்கள் பற்றியோ, அவர்களின் சம்பள உயர்வு குறித்தோ ஒரு வார்த்தைதானும் கூறப்படவில்லை. இந்த அநீதியைத் வரவுசெலவுத் திட்ட விவாதத்தில் கலந்துகொண்டு தட்டிக் கேட்கவேண்டிய ஒரேயொரு பிரதிநிதியான தொண்டமானும் அமெரிக்காவுக்கு பறந்துவிட்டார். இதிலிருந்து இந்த அரசுக்கும் அதை கட்டித்தழுவும் இ.தொ.கா. வுக்கும் தோட்டத்தொழிலாளர்கள் மீது உள்ள அக்கறையை புரிந்துகொள்ள முடியும்.

'தோட்டத் தொழிலாளர்களை தேசிய வாழ்வில் இருந்து புறக்கணிக்கமாட்டோம்; அவர்களின் நல்வாழ்வுக்கு வழிசமைப்போம்; அவர்கள்தான் நமது தேசிய வருமானத்தின் முதுகெலும்பாக உள்ளவர்கள்; அவர்களின் வாழ்வை வளம்படுத்துவோம்' என்றெல்லாம் இன்றைய ஆட்சியின் தலைவர்கள் ஓலம் வைத்து வருகின்றார்கள். இந்த ஓலம் எல்லாம், வெறும் நீலிக்கண்ணீர் மட்டுமே. கடந்த ஆண்டு வழங்கப்பட்ட 70 ரூபா சம்பள உயர்வை இதுவரை அரசு தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கவில்லை. இந்த 70 ரூ. சம்பள உயர்வு தோட்டத் தொழிலாளர்கட்கு கொடுக்கப்படவேண்டுமா என்ற பிரச்சினை சம்பள நிர்ணயக் குழுவுக்கு வந்தபொழுது 'கொடுக்கக் கூடாது' என்று அரசின் சார்பான பிரதிநிதிகள் வாக்களித்து தீர்மானத்தை தோற்கடித்து விட்டார்கள். இந்த 70 ரூபாவுக்கு தோட்டத் தொழிற்சங்கங்கள் அடையாளவேலை நிறுத்தம் செய்தபோது இ. தொ. கா.வும் அதன் தலைவர்களும் அரசுக்கு விசுவாசம் தெரிவித்து அறிக்கைகள் வெளியிட்டு தமது நிறத்தைக் காட்டிக்கொண்டனர்.

இப்பொழுது வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 107 சம்பள உயர்வை அரசாங்கம் அறிவித்துளது. தோட்டத் தொழிலாளர்கள் இன்று அரசின் கட்டுப்பாட்டிலுள்ள தோட்டத் தொழில் துறையில்தான் வேலை செய்கின்றார்கள். அப்படியாயின் அவர்களுக்கு அரசுஅறிவித்த சம்பள உயர்வு மறுக்கப்படுவது ஏன்? அவர்களுக்கு வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு இல்லையா? அல்லது மிதமிஞ்சிய சம்பளத்தை பெற்று சுகபோகமாக வாழ்கின்றனரா? ஒரே வார்த்தையில் கூறினால் தோட்டத் தொழிலாளர்கள் தேசிய வாழ்விலிருந்து புறக்கணிக்கப்படுகின்றனர். யூ. என் பி. எவ்வளவு உபதேசங்களைச் செய்தாலும் தோட்டத் தொழிலாளர்கள் பற்றிய அதனது உறைந்து போன கொள்கை எவ்விதத்திலும் மாறவில்லை. மாற்றான்தாய் மனப்பான்மையுடன் நடந்துகொள்ளும் இந்த அரசால் ஒருபோதும் தோட்ட தொழிலாளர்களின் நலனைக் கவனிக்க முடியாது.

தான் பதவியைப் பெறுவதற்குமுன் மாத சம்பளம், சமசம்பளம், சம்பள உயர்வு. இன்னும் பல கோரிக்கைகளை முன்வைத்து கொக்கரிப்புச் செய்த தொண்டமான் தனக்கு பதவி கிடைத்ததும் அவற்றை எல்லாம் மூட்டை கட்டி தொழிற் சங்க காரியாலய முகட்டில் வைத்துவிட்டு மாடுவளர்ப்பு பால் உற்பத்தி, பொலிஸ்—இராணுவத்தில் ஆள்சேர்ப்பு பற்றி எல்லாம் கதை அளந்து வருகிறார். தோட்டத் தொழிலாளர்களின் அடிப்படைப் பிரச்சினைகளும் ஜீவாதார உரிமைகளும் மறுக்கப்படுவது பற்றி கவலைப்படாது அவற்றுக்கு அப்பால் ஏதேதோ எல்லாம்பற்றிப் பேசுவது வெறும் விழல் பேச்சாகவே இருக்கும்.

இவ்வளவு அநீதிகளையும், புறக்கணிப்புக்களையும பற்றி வரவுசெலவுத்திட்ட விவாதத்தில் கலந்துகொண்டு ஊருக்குப் பெருக்காவது நாலு வார்த்தை கூடப் பேச முடியாது தொண்டமான் அமெரிக்காவுக்கு சென்று விட்டார். மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் முடிசூடா மன்னன் நானே என்ற தலைவர், அவர்களது இன்னல் பற்றி பாராளுமன்றத்தில் ஒரு பேச்சாவது பேசியிருக்கக் கூடாதா? எப்படிப் பேச முடியும்? யூ.என்.பி.யின் பங்காளியாச்சே! ஜே. ஆர். ரின் ஆத்மநண்பராச்சே!

"நான் அமெரிக்கா சென்றது மலையக தோட்டத் தொழிலாளர்களுக்கு பெரும் கௌரவம் அல்லவா? அங்கு உங்களைப்பற்றித்தான் பேசினேன்" என்றெல்லாம் தொண்டமான் வந்து வாயடித்தால் தோட்டத் தொழிலாளர்கள் நம்பிவிடுவார்கள் என்ற நினைப்பில்தான் இப்பொழுதும் இ·தொ.கா.வும் அதன் தலைவர்களும் இருக்கின்றனர்போலும். ஆனால் தொடர்ந்தும் தோட்டத் தொழிலாளர்களை தொண்டமானோ அன்றி அவர் ஆதரிக்கும் யூ.என்.பி.யோ ஏமாற்ற முடியாது. ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தோட்டத்தொழிலாளர்கள் இத்தகையவர்களின் சுயரூபத்தை அடையாளம் கண்டே வந்துள்ளனர். 'கெட்டிக்காரன் புளுகு எட்டு நாட்கள் மட்டுமே'. ★

## ரூபா-2 பிச்சைப்பணமா?

தோட்டத் தொழிலாளர்களுக்கு அடுத்த வருடத்தில் நாளொன்றுக்கு ரூபா 2-00 சம்பளஉயர்வு கொடுக்க ஆலோசிக்கப்பட்டு வருவதாக அரசு வட்டாரங்களில் இருந்து செய்தி வெளியாகி உள்ளது. அப்படியாயின் முப்பது நாட்கள் முழுமையாக வேலை செய்தாலும் ஒருமாதம் ரூபா 60-00 மட்டுமே கிடைக்கும். அப்படி முப்பதுநாள் வேலை எந்தத் தோட்டத்திலே கொடுக்கப்போகின்றார்கள். அப்படித்தான் அறுபது ரூபா கொடுத்தாலும் தோட்டத் தொழிலாளர்களுக்கு அது எந்தளவு போதுமானது. முன்பு யூ.என்.பி. ஆட்சியுடன் கூடிக்குலாவி தொண்டமான் 10 சதம் பிச்சைகாசு பெற்றுக்கொடுத்த கதை உண்டு. இப்பொழுது அதே மனிதர் ரூபா 2-00 பிச்சைக்காசு பெற்றுக் கொடுக்க இருக்கிறார்போலும். எனவே 177 ரூபா சம்பள உயர்வு தோட்டத் தொழிலாளர்களுக்கு 'வழங்கப்படவேண்டும் என்ற கோரிக்கையை சகல தொழிற்சங்கங்களும் வற்புறுத்தும் இயக்கத்தை முன்னெடுக்க வேண்டும்.

## அடுத்த இதழில்...

'தோட்டத்தொழிலாளர்களின் பிரச்சினைகளும அவர்களின் போராட்ட வழிகளும்'' என்னும் தலைப்பில் செங்கொடிச் சங்கத்தின் தலைவரும் உழைக்கும் மக்கள் கட்சியின் செயலாளருமான தோழர் எச். எல். கே. சுரவிட்ட அவர்கள் எழுதியுள்ள கட்டுரை அடுத்த இதழில் இடம்பெறும்.

—ஆசிரியர் குழு

## வரவுசெலவுத் திட்டத்தால்......

1-ம் பக்கத் தொடர்.........

வேலை வெளிநாடுகளில் மண்டியிட்டுப்பெற்ற பணத்திற்கு வட்டியாக கடந்த ஆண்டு 5100 கோடிரூபா செலுத்தப்பட்டுளது. அடுத்த ஆண்டு 8137 கோடி ரூபா செலுத்த வேண்டிவரும் என்று கூறப்படுகிறது.

இவ்வாறான ஒரு மோசமான வரவுசெலவுத்திட்டத்தின் பின்னணி யூ. என் .பி. கடந்த நான்கு ஆண்டுகளாகக் கடைப்பிடித்து வந்த தவறான பொருளாதாரக் கொள்கையேயாகும். தாராள இறக்குமதிக் கொள்கையும், திறந்த பொருளாதாரபாதையும், 'எல்லாம் தனியார் மயம்' என்ற கொள்கையும் நாட்டை குட்டிச்சுவராக்கி விட்டது. இந்த வரவு செலவுத்திட்டத்தின்மூலம் பொது மக்களுக்கு எந்த கஷ்டத்தையும் கொடுக்கவில்லை என்று நிதியமைச்சர் மேலோட்டமாக கூறியுள்ள போதிலும் மறைமுக வழிகளில் சாதாரண மக்களின் மீது பெரும் தாக்குதலைத் தொடுத்துள்ளார். மொத்த விற்பனை வரி செலுத்தும் பெரும் வியாபாரிகள் தமது இழந்த பணத்தை யார்தலையில் சுமத்துவர் என்பது சிறு குழந்தைக்குக்கூட தெரியும். இந்த வரிமுறையாலும், பணவீக்கத்தாலும் பொருட்களின் விலை மேலும் உயர்ந்து கொண்டே செல்லும். இதைச் சுமக்கவேண்டியவர்கள் மக்களேயாவர்.

கடந்த ஆண்டின் வாழ்க்கைச்செலவின் அதிகரிப்பை பொறுக்க முடியாது தொழிற்சங்கங்கள் 300 ரூபா சம்பள உயர்வைக்கேட்டு வேலைநிறுத்தம் செய்தன. ஆனால் இன்றைய வாழ்க்கை செலவின் அதிகரிப்பு வேகத்திற்கு 1000 ரூபா சம்பள உயர்வு கிடைத்தாலும் வாழ்க்கையைச் சமாளிக்கலாம் என்பது முடியாத ஒன்றேயாகும். இந்நிலையில் அரச ஊழியர்களுக்குமட்டும் கொடுக்கப்பட்டுள்ள 107 ரூபா சம்பள உயர்வு பத்து ரூபாவிற்கு பெறுமதியுடையதாக இருக்குமா என்பதுகூட சந்தேகமே. இச்சம்பளவுயர்வைக் கூறிக்கொண்டு அடுத்து எண்ணெயின் விலையும் போக்குவரத்து கட்டணங்களும் கூட்டப்பட உள்ளன, அப்பொழுது மேலும் பொருட்களின் விலைகூடவே செய்யும். தனியார் துறையினருக்கும் தோட்டத் தொழிலாளர்களுக்கும் இச்சம்பள உயர்வு உத்தரவாதப்படுத்தப்படவில்லை,

இந்த வரவு செலவுத்திட்டம் சாதாரணமக்களை வாட்டி வதைத்து உயர்வர்க்கத்தினரையும், அந்நிய ஏகபோகக் கம்பனிகளையும் வாழவைக்கும் யூ. என். பி. யின் மக்கள் விரோத நடவடிக்கைகளை வெளிப்படுத்தும் ஒரு வரவு—செலவுத்திட்டமேயாகும்.

## அரசு பெருமின...

[ 1 ஆம் பக்கத் தொடர் ]

முதன்மைப்படுத்தி அந்நிய வல்லரசுகளின் ஆதிக்கப் போட்டியை கவனத்தில் கொண்டு இனங்கள் மத்தியிலான நல்லுறவுக்கும், பரஸ்பரம் புரிந்துணர்வுக்கும் வழிவகைகளை த்தடவேண்டும், பொது எதிரியை இனம் காட்டி இன ஐக்கியத்தை வற்புறுத்தி நாடு முழுவதிலும் தீவிர பிரசாரத்தைச் சிங்கள — தமிழ் மக்கள் மத்தியில் முன்னெடுக்க வேண்டும், இது தேசநலன் விரும்பும் சகலரினதும் கடமையாகும்.

தமிழ் மக்களுக்கு எதிரான ஆளும் வர்க்கத்தின் நடவடிக்கைகளால் வெறுப்புற்றும் அதே வேளை தமிழர் கூட்டணியின் உயர் வர்க்கத் தலைமையின் மீதான விரக்தியாலும் தமிழ் இளைஞர்களில் ஒரு பகுதியினர் பயங்கரவாதத்தை ஒரு வழியாக பின்பற்ற முயன்றால் அது தற்கொலைப் பாதையாக இருக்குமே அன்றி இனவிடுதலையாகவோ அன்றி தேசவிடுதலையாகவோ இருக்க முடியாது. எந்த ஒரு பிரச்சினைக்கும் ''பயங்கரவாதம்'' ஒரு மார்க்கமாக மாட்டாது. சகல உழைக்கும் மக்களினதும் ஒன்றுபட்ட புரட்சிகர வெகுஜன போராட்டங்கள் தேசம் தழுவிய ரீதியில் முன்னெடுக்கப்படுவதே சரியானதாகும்.

இன்றைய முதலாளித்துவ பாராளுமன்ற அமைப்பு முறைக்குள் இனப்பிரச்சினையை முற்று முழுதாகவோ அன்றி மனப்பூர்வமாகவோ தீர்த்துவைக்கப்படும் என்ற பிரமையை, எமது கட்சி கொண்டிருக்கவில்லை. ஆனால் இனங்கள் மத்தியில் வளர்ந்துள்ள மனக்கசப்புகளையும்—துவேஷ நிலைமைகளையும், பரஸ்பரம் கொண்டுள்ள பயப்பீதியையும் குறைப்பதற்கு அல்லது ஓரளவுக்குத் தானும் இல்லாமல் செய்வதற்கு எடுக்கப்படும் நேர்மையான நடவடிக்கைகளை எமது கட்சி எப்பொழுதும் ஆதரிக்கும்.

எதிர்வரும் ஒரு பொதுத் தேர்தலை அல்லது ஜனாதிபதித் தேர்தலை மையமாக வைத்து நடாத்தப்படும் எந்தப் பேச்சுவார்த்தையும் இனப் பிரச்சினையைக் குறைக்கும் அல்லது தீர்க்கும் என்று நம்ப முடியாது. இதனாலேயே யூ. என். பி. — கூட்டணி உயர் மட்டப் பேச்சுவார்த்தை மக்கள்மத்தியில் அதிக நம்பிக்கை எதையும் கொடுக்கவில்லை. யூ. என். பி. முழுச் சிங்கள மக்களின் பிரதிநிதியாக இருக்க முடியாதது போலவே தமிழர் கூட்டணியும் முழுத்தமிழ் மக்களின் பிரதிநிதியாக இருக்க முடியாது. ஆதலால் இனப் பிரச்சினையில் குறைந்தபட்ச தீர்வு ஏற்படவும் இனங்கள் மத்தியிலான நல்லுறவு பேணப்படவும் நாட்டின் சகல தரப்பு மக்களையும் பிரதிநிதித்துவம் செய்யும் சகல கட்சிகள், பொது ஸ்தாபனங்கள் என்பனவற்றின் பிரதிநிதிகள் கூட்டப்பட்டு பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்படல் வேண்டும். அவ்வாறான பேச்சுவார்த்தையும் அதன் அடிப்படையில் எடுக்கப்படும் முடிவுகளும் மனப்பூர்வமாகசகல தரப்பினராலும் நடைமுறைபடுத்தப்படுவதாலுமே இனங்கள் மத்தியிலான நல்லுறவை சீர்செய்ய முடியும் என எமதுகட்சி கருதுகின்றது.

இன்றுள்ள சூழலில், இனப்பிரச்சினையின் குறைந்தபட்ச தீர்வுக்கும் இனங்கள் மத்தியிலான நல்லுறவுக்கும் கீழ்வரும் அம்சங்கள் நடைமுறைச்சாத்தியமாக்கப்படல் வேண்டும் என இலங்கைக்கம்யூனிஸ்ட் கட்சி (இடது) கருதுகின்றது.

★ அரசு தான் கடைப்பிடித்துவரும் பெருமினவாத நடவடிக்கைகளை உடன் நிறுத்தவேண்டும்.

★ தேசியநலன் கருதியும் மேலாதிக்க வல்லரசுகளின் ஆதிக்கப் போட்டியை மனதில்கொண்டும் தமிழர் கூட்டணி பிரிவினைக்கோரிக்கையை கைவிடல் வேண்டும்.

★ வடக்கு — கிழக்கு மாகாணங்களில் அப்பிரதேச மக்களின் விருப்பத்திற்கு மாறான திட்டமிட்ட குடியேற்றங்களை அரசு மேற்கொள்ளக்கூடாது.

★ வேலை வாய்ப்பிலும் உயர்கல்வியிலும் பாகுபாடுகள் புறக்கணிப்புகள் இன்றி இனங்களின் விகிதாசார அடிப்படையில் நியமனங்களும் தெரிவுகளும் இடம் பெறல் வேண்டும்.

★ மலையகத் தமிழ் தோட்டத்தொழிலாள மக்களைத் தேசிய வாழ்விலிருந்து புறக்கணிக்கும் நடவடிக்கைகளை கைவிட்டு அவர்களின் சீவாதார உரிமைகள் வழங்கப்படல் வேண்டும்.

★ இலங்கையின் தேசிய நலன்களில் பூரண அக்கறை கொண்டுள்ள சகல இந்திய வம்சாவழித்தொழிலாளர்களுக்கும் பிரஜாவுரிமை கொடுக்கப்படல்வேண்டும்.

★ மொழிப் பிரயோகம் சம்பந்தமாக அரசியல் சாசனத்தில் குறிந்பிட்ட தேசியமொழி என்ற தகைமைக்கேற்ப அரசதிணைக்கள கூட்டுத்தாபன மற்றும் ஏனைய துறைகளிலும் தமிழ்மொழி உபயோகம் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்,

அச்சுப்பதிப்பு: யாழ்ப்பாண அச்சகம் 407, ஸ்ரான்லி வீதி. யாழ்ப்பாணம். வெளியிடுபவர்: சி. நவரத்தினம் 15/1 மின்சாரநிலைய வீதி யாழ்ப்பாணம்